# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR

## O.S. No.618/2004

Deposition of **P.W.-2** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A.Tamilselvi, Gr.III, Bench Clerk of this court, on 17.04.2026 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : செல்ல அம்பாயிரம் Father's Name : பழனிமுத்து

துவக்க நேரம்: 01.01P.M

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**:

1. இன்றைய தினம் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திற்கு என்னை அழைத்து வந்தது யார் என்றால் குமார் அழைத்து வந்தார். இவ்வழக்கின் வாதிகளை தெரியுமா என்றால் தெரியும், சின்னப்பொண்ணு, குமார் மற்றும் ராமசாமி ஆகியோர்கள் ஆவார்கள். பிரதிவாதிகள் யார் யார் என்றால் மணிமோகன், கந்தசாமி மற்றும் செல்லக்கொடி ஆகியோர்கள் ஆவார்கள். வாதிகளுக்கு நான் உறவினரா என்றால் ஆமாம். வழக்கின் விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்தின் சர்வே எண் என்ன என்றால் 184/5 ஆகும்.

2. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தின் விவரங்கள் அனைத்தும் தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்தை அளவீடு செய்த பின்னர் அதில் ஆக்கிரமிப்பு செய்த நபர்களான ஆனந்த் மற்றும் அமுதலட்சுமி ஆகியோர்களுடன்

வாதிகள் சமாதானம் ஆகிவிட்டார்கள் என்றால் சரிதான். அவ்வாறான ஆக்கிரமிப்பு பகுதியை மேற்படி இருவரும் வாதிகளிடமிருந்து கிரயம் பெற்றுள்ளார்களா என்றால் இல்லை, வழக்கு முடிந்தபின்பு கிரயம் பெற்றுக் கொள்வதாக கூறியுள்ளார்கள். எனது நிரூபண வாக்குமூலத்தில் 6வது பத்தியில் நில அளவையர் மூலம் தாவா நிலத்தை அளந்து வாதிகள் நிலத்திலும், பிரதிவாதிகள் நிலத்திலும் எவ்வித ஆக்கிரமிப்பும் இல்லையென்று ஊர்ஜிதம் செய்தார்கள் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். ஆகையால் பிரதிவாதிகள் தாவா சொத்தை ஆக்கிரமிப்பு செய்வதற்கும், வாதிகளின் அனுபவத்தை இடையூறு செய்வதற்கும் வழக்கு மூலமே எழவில்லை என்றாலும், அதனால் இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல.

3. எனது முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்தில் இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்பட்ட இரண்டு நபர்கள் தாவா சொத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தில் உள்ள ஆக்கிரமிப்பை அகற்ற வேண்டி நீதிமன்றத்தில் வாதிகள் தரப்பில் மனு செய்துள்ளார்களா என்றால் ஆமாம். அதன் பிறகு மேற்படி மனுவை அந்த நபர்களுக்கு எதிராக எந்த பரிகாரமும் வேண்டாமென்று திரும்ப பெற்றுக் கொண்ட விவரம் தெரியுமா என்றால் தெரியும். உண்மையான ஆக்கிரமிப்பாளர்களை சேர்க்காத காரணத்தினால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றால் சரியல்ல. மேற்கண்ட இரு நபர்களும் யார் யார் எவ்வளவு நிலங்களை ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

4. பிரதிவாதிகள் தாவா சொத்தில் ஆக்கிரமிப்பு செய்யவில்லையென்று எனது நிரூபனவாக்குமூலத்தில் கூறியுள்ள நிலையில் இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனவே பிரதிவாதிகளுக்கு எதிரான இவ்வழக்கில் எந்த பரிகாரமும் வழங்க இயலாது என்றால் சரியல்ல. வாதிகள் என் உறவினர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முடித்துக் கொள்ளப்பட்டது.

முடிவு நேரம்:01.15 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct

Sd/-D.JansiRani
Additional District Munsif, Attur

Typed by Tmt. L. Kalaiselvi - O.S. No.618/2004, Dt.17.04.2026.